**தேசிய இளைஞர் படையணி - 2018**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் படையணியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய இளைஞர் படையணியின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, படையணி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது படையணியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

படையணியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

-------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 07(அ) ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களின் உரிமை மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் குறித்து வெளிப்படுத்தப்பட வேண்டியுள்ள போதிலும் படையணியில் காணப்பட்ட ரூபா 331,030,233 ஆன மதிப்புள்ள கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமை கையேற்கப்படாமையுடன் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டு கொள்கையின் கீழ் தேசிய இளைஞர் படையணியினால் பயன்படுத்தப்படுகின்ற கட்டிடம் அமைந்துள்ள காணியின் உரிமை கையக்கப்படுத்தப்படவில்லை. எனினும், 2011 ஆம் ஆண்டிலிருந்து அச்சொத்துக்களின் நிர்மாணத்திற்கு பயன்படுத்தப்படுகின்ற மூலதன ஒதுக்கம் 5 சதவீதத் தேய்மான ஏற்பாடுகளின் கீழ் தேய்மானமிடப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் உறுதியான வெளிப்படுத்தல் கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 21(ஊ) பந்தியின் பிரகாரம் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உட்பட குறிப்புக்கள் மற்றும் ஏனைய விரிவான குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியுள்ள போதிலும், அரச மானியப் பெறுவனவுகளுக்கான கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் படையணியின் பயிற்சி நிலையக் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு பொறியியல் சேவைகளை வழங்கியமைக்காக கட்டிடத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 100,653,154 நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாமையால் அப்பெறுமதியால் நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் முடிவுறாத வேலைகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு பொறியியல் சேவைகளை வழங்கியமைக்காக கட்டிடத் திணைக்களத்திற்கு ரூபா 100,653,154 செலுத்த வேண்டியுள்ள போதிலும் அது கணக்கறிக்கைகளில் குறிப்பிடப்படுவதற்கு தவறியிருந்தமையை ஏற்றுக் கொள்கின்றேன். 2019 வருடாந்த கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிட்ட சரியான சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிககப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | மீளாய்வாண்டில் 07 வாகனங்களுக்குரிய 08 வாகன விபத்துக்கள் ஏற்பட்டிருந்த போதிலும் வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| - 5.1 ஆம் பந்தி | படையணியில் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் 100 வரை அதிகரிப்பதற்கான திட்டமொன்றுடன் எதிர்வரும் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | - 6.5.1 ஆம் பந்தி | கணக்காண்டு நிறைவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் படையணியில் குறிப்பிட்ட திகதிக்கு 02 வருடங்கள் தாமதமாகி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | வருடத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் ஆனால் இதுவரை தேசிய இளைஞர் படையணி அதிகார சட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளமையால் அதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் புதிய அதிகாரச் சட்டத்துடன் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. வருடத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் ஆனால் இதுவரை தேசிய இளைஞர் படையணி அதிகார சட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளமையால் அதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் புதிய அதிகாரச் சட்டத்துடன் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய | I. குடிமக்கள் / வாடிக்கையாளர் | தேசிய இளைஞர் படையணிக்காக | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | சாசனத்திற்கு இணங்க நிறுவனத்தினால் குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டு அது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்க வில்லை. | குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனமொன்று தயாரிக்கப்பட வில்லையென்பதை ஏற்றுக் கொள்கின்றேன். | எடுக்கப்பட வேண்டும். |
| | II. | குடிமக்கள் / வாடிக்கையாளர் சாசனம் தயாரித்தல் மற்றும் செயற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கும் நிறுவனத்தினால் முறைமை யொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை | நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களில் எமது நோக்கம், செயற்பணி மற்றும் எம்மால் செய்யப்படுகின்ற சேவைகள் தொடர்பாக காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. | - மேற்படி - |
| | III. | ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை | பதவியணிக்கான வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை என்பதுடன் விரைவில் உரிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| | IV. | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படல், திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைத்தல், திறன் அபிவிருத்தி திட்டங்களை நடாத்துதல் தொடர்பான பொறுப்புக்கள் | இந்நடவடிக்கைகளுக்கு பொறுப்பு மேலதிக பணிப்பாளர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அப்பொறுப்பு கையளிப்பதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | - மேற்படி - |

பகிர்ந்தளிக்கப்பட்டு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப் பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 56,093,422 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 73,070,284 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 129,163,706 ஆன முன்னேற்றனொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மொத்தச் செலவுகள் ரூபா 182,628,694 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் படையணியினால் 49 பிரதேசப் பயிற்சி நிலையங்கள் நடாத்தப்பட்டு வருவதுடன், அந்நிலையங்கள் அமைந்துள்ள காணிகளின் அளவு 116.8769 ஹெக்டயர் ஆகும். அரச திணைக்களங்களுக்கு காணிகளை வழங்குதல் தொடர்பான சான்றிதழ் மூலம் 06 நிலையங்களுக்கான காணி 10.8859 ஹெக்டயர் படையணிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 35 நியைங்களுக்கான கையேற்றல் நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன. வேறு நிறுவனங்களுக்கு உரிய காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்களில் 08 நிலையங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இந்நிலையங்களுக்கு மீளாய்வாண்டில் கட்டிடங்கள் மற்றும் கட்டிட மேம்படுத்தல் என்பவற்றிற்காக ரூபா 128,934,770 | இளைஞர் படையணி ஆரம்பிக்கப்பட்ட போது பிரதேச செயலாளர் (அரசு), இலங்கை மகாவலி அதிகார சபை, இலங்கை முதலீட்டுச் சபை, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, கல்வி அமைச்சு போன்ற நிறுவனங்களின் பொறுப்பில் காணப்பட்ட வெற்றுக் காணிகள் மற்றும் கட்டிடங்களுடனான காணிகள் பெறப்பட்டு இளைஞர் படையணிப் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அக்காணிகள் மற்றும் கட்டிடங்கள் அச்சந்தர்ப்பத்தில் முறையாகக் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. தற்போது காணிகள் முறையாக கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2018.12.31 வரை 06 இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளின் | காணிகளை கையகப்படுத்தல் மற்றும் கணக்கீடு செய்தல் விரைவாக மற்றும் முறையாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் 2018 திசெம்பர் 31 இல் முடிவுறாத மூலதன வேலைகளுக்காக ரூபா 1,694,222,933 செலவிடப்பட்டிருந்தது.- | கையேற்றல் நடவடிக்கைகள் முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதுவரை அவற்றின் எண்ணிக்கை 18 ஆக உயர்த்தப்பட்டிருந்தது. அத்துடன் மேலும் 02 நிலையங்களுக்கு உரிய காணிகளுக்கான நடவடிக்கைகள் ஏறக்குறைய நிறைவடைந்துள்ளது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 49 பயிற்சி நிலையங்களுக்காக 2019 குழுவிற்கு 3750 பேர் மற்றும் இரண்டாம் குழுவிற்கு 3750 பேரும் ஆக இரு குழுக்களுக்காக 7500 பயிற்சியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 49 நிலையங்களுக்கு இரு குழுக்கள் வீதம் 7,271 பயிற்சியாளர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் இணைத்துக் கொள்ளப்பட்ட 1,883 பயிற்சியாளர்கள் அதாவது 26 சதவீதமானோர் கற்கைநெறியை கைவிட்டுச் சென்றுள்ளதுடன் கற்கைநெறியை திருப்தியாக பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை 5,388 ஆகும். கந்தளாய் நிலையத்தில் முதலாம் குழுவிற்காக போதியளவான மாணவர் எண்ணிக்கையொன்று பதிவு செய்யாமையால் பயிற்சியாளர் இணைத்துக் கொள்ளப்படவில்லை. நிலையங்களில் ஒரு வகுப்பறைக்கு 50 மாணவர் வீதம் 4 வகுப்பறைகளில் பயிற்சியளித்தல் வசதிகள் ஒதுக்கப்பட்டிருந்தும் 35 நிலையங்களில் மாணவர் | 02 குழுக்களுக்கான 7271 பயிற்சியாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் 97 சதவீதம் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததை குறிப்பிடுகின்றேன். அதன் பிரகாரம் 2018 கற்கைநெறிகள் திருப்தியாக பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை 5388 ஆக குறிப்பிட முடியும். அதன் பிரகாரம் கற்கைநெறியின் வெற்றியானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 4.3 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தது. அனைத்து நிலையங்களிலும் கற்கைநெறிகளை திருப்திகரமாக பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை 5833 ஆக இருந்ததுடன், ஒட்டுமொத்தமாக இணைத்துக் கொள்ளப்பட்ட அளவுடன் ஒப்பிடும் போது 80 சதவீதம் வெற்றியொன்றை அடைந்திருப்பதை குறிப்பிட முடியும். | எதிர்பார்த்த செயலாற்றலை இலக்காகக் கொண்டு அடைந்து கொள்வதற்கு தேவையான முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

எண்ணிக்கை 50 இற்கு குறைவாக இருந்தமையால் அந்நிலையங்களின் வளங்கள் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. மேலும் ஒவ்வொரு நிலையங்களுக்கான கிரயம் கணக்கீடு செய்யும் முறைமையொன்று செயற்படத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3 சொத்துக்களின் குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்ட நிலையங்களில் கடமைகளை மேற்கொள்வதற்காக 2017 திசெம்பர் 31 இல் ஒன்று ரூபா 650,000 வீதம் கொள்வனவு செய்யப்பட்ட 18 முச்சக்கர வண்டிகள் நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமானமையால் 2019 ஆம் ஆண்டில் 03 முச்சக்கர வண்டிகள் படையணியின் வெளி நிறுவனமான சிறுவணிக அபிவிருத்தி பிரிவிற்கும் 02 முச்சக்கர வண்டிகள் தலைமை அலுவலகத்திற்கும் கையளிக்கப்பட்டிருந்தன. 2022 பெப்ரவரி மாதம் எஞ்சிய 13 முச்சக்கர வண்டிகளும் 09 வலய அலுவலகங்கள், 03 பயிற்சி நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. | திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையங்கள் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமானமையால் 18 முச்சக்கர வண்டிகள் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு வைக்கப்பட்டிருந்த 18 முச்சக்கர வண்டிகளில் 13 தற்போது பயிற்சி நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதை குறிப்பிடுகின்றேன். அத்துடன் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் எஞ்சிய முச்சக்கர வண்டிகளில் 03 வண்டிகள் சிறு வணிக அபிவிருத்தி பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய முச்சக்கர வண்டிகள் இளைஞர் படையணித் தலைமையக வாகன குழாமின் கடமைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதையும் குறிப்பிடுகின்றேன். | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை திட்டமிட்டபடி நிறைவேற்றுவதற்காக ஆக்கபூர்வமான விதத்தில் சொத்துக்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 சனவரி 01 இல் காணப்பட்ட சீருடை இருப்பின் பெறுமதி ரூபா 23,357,753 என்பதுடன் அதில் ரூபா 13,888,735 பெறுமதியான சீருடைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. வருடத்திற்கான சீருடைத் தேவை வருட ஆரம்பத்தில் காணப்பட்ட இருப்பில் 59 சதவீதமாகவே காணப்பட்டதுடன் தேவைகளை மதிப்பீடு செய்யாது 2018 ஆம் ஆண்டில் ரூபா 3,078,685 ஆன சீருடைகள் மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | தேசிய இளைஞர் படையணியால் ஆரம்பிக்கப்பட்டிருந்த முன்னோடித் திட்டத்தினுடாக நாடளாவிய ரீதியில் 75 பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டிற்காக பயிற்சியாளர் 30,000 பேர் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சேர்ப்பிற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த அளவைக் கருத்திற் கொண்டு அந்த அளவிற்கு இருப்பில் காணப்பட்ட சீருடைகள் போதுமானதாக இல்லாததால் 2,252 கென்வஸ் சப்பாத்துக்கள் 750 டீசேர்ட் மற்றும் 5,620 இருப்பு பட்டிகள் என்பன கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | முறையான திட்டத்திற்கு மற்றும் சிக்கனமான பங்களிப்பாக இருப்புக்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் சொத்துக்கள் ஆக்கபூர்வமாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 12 புதிய நிலையங்களை ஆரம்பிப்பதற்கு அவசியமான மற்றும் அவசரமான விடயமாகக் கருதி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததும் அந்நிலையங்கள் ஆரம்பிக்கப்படாமையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சிய வாடகை, காப்புறுதி கட்டணம், பாதுகாப்புச் சேவை கட்டணம், சம்பளம் மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் கட்டணமாக 2019 மே வரை ரூபா 5,147,125 | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முடிவுற்ற செயற்திட்டங்களின் கீழ் புதிய பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் தேசிய உபகரணம் மற்றும் பொறிகள் நிறுவனம் மற்றும் இன்னொரு தனிப்பட்ட நிறுவனத்திற்கு நிர்மாண நடவடிக்கைகள் வழங்கப்பட்டிரந்தது. எனினும் நிர்மாணிக்கப்படுகின்ற புதிய நிலையம் 2017 ஆம் ஆண்டின் இறுதிப் பாதியில் ஆரம்பிக்கப்படுவதற்கு திட்டமிட்டு, முன்னாள் பணிப்பாளர்களின் அறிவுறுத்தலின் | சரியாக திட்டமிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் செலவுகள் ஆக்கபூர்வமாக முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்றதாக செலவிடப்பட்டிருந்தது. | அடிப்படையில் அந்நிலையத்திற்குத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.<br><br>தேசிய உபகரணம் மற்றும் பொறிகள் நிறுவனத்திற்கு உரிய நிர்மாண நடவடிக்கைகள் தாமதமானதால் அவ்வருடத்தில் பெறப்பட்டிருந்த பொருட்கள் எதிர்காலத்தில் பயன்படுத்தக் கூடியவாறு பாதுகாப்பாக பேணப்படுதல் அவசியமாகும். அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் மே மாதம் வரை ரூபா 5,147,125 ஆனது செலவிடப்பட்டிருந்ததை ஏற்றுக் கொள்கின்றேன். | |
| (ஆ) | மீகஹசிவுல மற்றும் பெல்மடுல்ல உத்தேச இளைஞர் படையணி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக முற்பணங்களாக முறையே ரூபா 19,662,001 மற்றும் ரூபா 17,018,461 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் காணியின் உரிமை தொடர்பான பிரச்சினையின் அடிப்படையில் அந்நிர்மாணங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் முற்பணத் தொகை 2021 திசெம்பர் 31 வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மீகஹசிவுல பயிற்சி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்டுள்ள முற்பணங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தீர்வொன்றும் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் முற்பணத் தொகை அறவிடப்படுவதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திறனாக மற்றும் முறையான விதத்தில் ஒப்பந்த முகாமைத்துவம் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெலிமடை நிலையத்தை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கை, காணியில் அமைந்துள்ள இடம் மற்றும் நிலப்பரப்பு காரணமாக கட்டிட நிர்மாணத்தில் நிலையற்ற இடர் நிலைமை காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் முற்பணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 19,259,020 ஆனது 2021 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வெலிகடை பயிற்சி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காகச் செலுத்தப்பட்ட முற்பணப் பிணையைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன், அதற்காக தீர்ப்பனவாளர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முற்பணத் தொகை அறவிடப்படுவதற்கான மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |